20.11.2024

கூடுதல் அமா்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

அமா்வு வழக்கு எண். 20/2019

அ.சா.19

| | | | |
|---|---|---|---|
| பெயர் | டாக்டர்.டி.கீதாஞ்சலி | | |
| த/பெ | தேவசகாயம் | | |
| கிராமம் | விழுப்புரம் | தொழில் | |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 58/2024 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளா் அவா்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறாா்.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது விழுப்புரம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சாா்ந்த மருத்துவ துறையில் பேராசிரியராக பணி புரிந்து வருகிறேன். கடந்த 28/06/2018 அன்று அதே துறையில் பணியிலிருந்த போது திருவெண்ணெய்நல்லூர் காவல் ஆய்வாளர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பத்தின் படி திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலைய கு.எண்.528/2018 என்ற வழக்கில் இறந்து போன அப்து ல் ஜப்பார் த.பெ முகமது இப்ராகிம் என்ற சுமார் 64 வயதான ஆண் சடலத்தை உடல் கூராய்வு செய்ய பணிக்கப்பட்டேன். உடலை அடையாளம் காட்டியவர் காவலர் எண். 2271 திரு.கே.சக்திவேல் என்பவர் ஆவார். இறந்தவரின் உடலில் காணப்பட்ட அடையாளங்கள்

1. இடது பக்க காரை எலும்பின் வெளிப்பகுதியின் மேல் ஒரு கருப்பு ம ச்சம்

2. வலது பக்க காரை எலும்பின் வெளிப்பகுதியில் கீழ் ஒரு கருப்பு மச்சம். உடல்

கூராய்வு 28/06/2018 அன்று மதியம் 12 .20 மணிக்கு தொடங்கப்பட்டது. பிணவிரைப்பு தன்மை உடல் முழுவதும் காணப்பட்டது. மிதமான போஷாக்குடைய ஆண் சடலமாக இருந்தது.

## I. வெளிப் புற பரிசோதனை

உடல் மீது காய்ந்த ரத்த கறை இருந்தது. ஆடைகள் ரத்த கறையுடன் இருந்தது. முழு கை வெள்ளை சட்டை வெள்ளை கோடிட்ட படிவத்துடன் இருந்தது. வெள்ளை நிற பனியன் இருந்தது. மரநிற பேன்ட் இருந்தது. சட்டையும் பனியனும் ரத்த கறையோடு பல கிழிசல்களோடு காணப்பட்டது. இவை மேல் பகுதியில் உள்ள காயங்களோடு ஒத்து இருந்தது. இடது கண் பாதி திறந்த நிலையில் இருந்தது. வலது கண் மூடி இருந்தது. வாய் மூடிய நிலையில் இருந்தது.

**<u>காணப்பட்ட கா யங்கள்</u>**

**<u>1. வெட்டு காயங்கள்</u>**

1. **முகம் மற்றும் தலையின் வலது புறத்தில் : மூன்று காயங்கள் பக்கவாட்டில் ஒன்றன் கீழ் ஒன்றாக இருந்தது.**

a. வலது காதிற்கு சுமார் 3 செ.மீ மேலாக இந்த காயம் தலையின் வலது புறத்தில் 16X2X2 CM அளவில் இருந்தது.

b. வலது காதின் கீழ் புறத்திலும் அதை ஒட்டிய முகத்தின் வலப்பக்கத்திலும்

**19x2 x3 4 cm** என்ற அளவில் இருந்தது வலது காது முழுவதும் வெட்டப்பட்டு இருந்தது.

c. வலது காதின் கீழ்புறத்தில் இருந்து வலது தாடை முழுவதுமாக முகவாய்கட்டை வரை **17x3 x3 4 cm** என்ற அளவில் இருந்தது. வெட்டு காயங்களின் இடையே உள்ள தலை முடி வெட்டப்பட்டு காணப்பட்டது. இந்த காயங்கள் வழியே அதன் அடியே உள்ள வெட்டப்பட்ட

கன்றிய திசுக்கள் , முறிந்த எலும்புகள் உறைந்த ரத்தம் வெட்டப்பட்ட தசைகள் மற்றும் ரத்த நாளங்கள் தெரிந்தது. காயங்களின் ஓரங்கள் அனைத்தும் சீராகவும் ஒழுங்காகவும் வெட்டப்பட்டு இருந்தது.

2. தலையின் இட புறத்தில் உள்ள வெட்டு காயம் 14x1 x1.5 cm என்ற அளவில் இருந்தது.

3. உச்சந் தலையில் உள்ள வெட்டு காயம் 14x1 x1 -1.5 cm என்ற அளவில் இருந்தது.

4. முதுகின் வலது புறத்தில் மேல் பகுதியில் ஒன்றன் கீழ் ஒன்றாக வெட்டு காயங்கள்

a. 12x2x1 cm b. 15.x3x4 cm c. 12x2.x1 cm என்ற அளவில் காணப்பட்டன.

மேலே கூறப்பட்ட காயங்கள் சிவந்த நிறத்திலும் இந்த காயங்கள் வழியே அதன் அடியே உள்ள வெட்டப்பட்ட கன்றிய திசுக்கள் , முறிந்த எலும்புகள் உறைந்த ரத்தம் வெட்டப்பட்ட தசைகள் மற்றும் ரத்த நாளங்கள் தெரிந்தது. காயங்களின் ஓரங்கள் அனைத்தும் சீராகவும் ஒழுங்காகவும் வெட்டப்பட்டு இருந்தது.

2. வலது பக்க நெஞ்சு கூட்டின் கீழ் பகுதியிலும் வலது பக்க வயிற்று பகுதியிலும் பல குத்து காயங்கள் 38x24 cm பரப்பளவில் பக்க வாட்டாக இருந்தது.

a வலது பக்க நெஞ்சு கூட்டின் கீழ் பகுதியில் , இரண்டு காயங்கள், 6 வது குறுக்கு எலும்பின் கீழே இந்த காயங்கள் 7 வது குறுக்கு எலும்பை யும் திசுக்களையும் 8x2x3 என்ற அளவில் இருந்தது.

b நெஞ்சு கூட்டின் கீழ் பகுதியின் நடுவில் 5x1.5x3 cm என்ற அளவில் இருந்தது.

c வலது பக்க வயிற்று பகுதியில் 6 காயங்கள் 4x1.5x2 cm என்ற அளவில் இருந்தது.

d இடது பக்க நெஞ்சு கூட்டின் கீழ் பகுதியில் 7 வது குறுக்கு எலும்பிற்கு கீழே 5x2x3 cm என்ற அளவில் இருந்தது. காயங்களின் ஓரங்கள் சீராகவும், ஒழுங்காகவும் வெட்டப்பட்டு இருந்தது.

3. வெட்டு காயங்கள் வலது புறங்கையில் கீழ்கண்டவாறு இருந்தது.

**a** வலது புறங்கையின் கீழ் பகுதியின் வெளிப்புறத்தில் **5x4x2-3 cm**, என்ற அளவில் அதன் அடியே உள்ள வெட்டப்பட்ட தசைகள் உடைந்த எலும்பு ஆகியவை தெரிந்தது. எடுக்கப்பட்ட தோலின் வழியே அடியே உள்ள தசை தெரிந்தது. **27x6x2-3 cm** என்ற அளவில் இருந்தது

**b** இடது ஆள்காட்டி விரலின் கீழ் பகுதியில் **4x2x1 cm** என்ற அளவில் வெட்டுகாயம் இருந்தது. காயங்களின் ஓரங்கள் சிவந்த நிறத்திலும், சீராகவும், ஒழுங்காகவும் வெட்டபட்டு இருந்தது.

4. இடது கால் முட்டியின் மீது சிவந்த நிறத்தில் சீராய்ப்பு காயங்கள் - **2x1 cm** , **1x1 cm** என்ற அளவில் இருந்தன.

**II** இவருடைய தலை பகுதியை கூராய்வு செய்து பார்த்ததில் தலையை போர்த்திய தோல் , கபால எலும்புகள் மற்றும் மூளையை போர்த்திய தோல், ஆகியவை வெளிப்புறத்தில் உள்ள காயங்களோடு ஒத்த நிலையில் வெட்டப்பட்டும் எலும்பு முறிவுடன் காணப்பட்டது. மூளையை சுற்றிலும் மூளையை போர்த்திய தோலின் மேல்புறத்திலும், அடிப்புறத்திலும் பரவலாக ரத்த கசிவுகள் காணப்பட்டது. குறுக்கு வெட்டு தோற்றம் வெளிறிய நிலையில் இருந்தது. தலையின் அடிப்பகுதியில் உள்ள எலும்புகள் தன்மையாக இருந்தன.

**III** இவருடைய நெஞ்சு கூட்டை கூராய்வு செய்து பார்த்ததில் நெஞ்சு கூட்டு எலும்புகள் தன்மையாக இல்லை. வலபுறத்தில் 6 மற்றும் 7 குறுக்கு எலும்புகளும் அதன் அடியே உள்ள தசைகளும் வெட்டப்பட்டு இருந்தது. இடப்புறத்தில் 7 வதுகுறுக்கு எலும்பு மற்றும்அதன் அடியே உள்ள தசைகள் வெட்டப்பட்டு இருந்தது. வலது பக்க நுரையீரல் கீழ் பகுதியில் **2x1x1 cm** என்ற அளவில் **துளை**க்கப்பட்ட காயம் காணப்பட்டது. இடது பக்க நுரையீரல் சாதாரண அளவில் இருந்தது. குறுக்கு- வெட்டு தோற்றம் ரத்தம் தோய்ந்த நிலையில்

இருந்தது. இருதயம் சாதாரண அளவிலும் குறுக்கு வெட்டு தோற்றத்தில் பெரிய தமனிகளின் உட்புறத்தில் பல பிளாக்குகள் காணப்பட்டன. வால்வுகள் மற்றும் இருதயத்திற்கு செல்லும் ரத்த நாளங்கள் தன்மையாக இருந்தன. உள் அறைகளில் சிறிய அளவில் உறைந்த ரத்தம் காணப்பட்டது.

IV இவரது வயிற்று பகுதியில் கூராய்வு செய்து பார்த்ததில் - இடது பக்க நெஞ்சு கூட்டின் கீழ் பகுதியில் உள்ள வெட்டு காயம் அதன் அடியே உள்ள இரை பையின் மேல் பகுதியை **2x1x0.5cm** என்ற அளவில் துளைத்து இருந்ததால் உணவு பொருள் வெளியே சிந்தி காணப்பட்டது. இரை பையில் சுமார் 300 கிராம் அளவிலான மஞ்சள் நிறத்தில் பாதி செறிமானமான உணவு பொருள் இருந்தது. வித்தியாசமான வாசனையுடன் இருந்தது. உள் தோல் ரத்தம் தோய்ந்து காணப்பட்டது. கல்லீரலின் வல பகுதியில் இரண்டு குத்து காயங்கள் **6x1x1 cm** என்ற அளவில் இருந்தன. இடது பகுதியில் **4x1x1cm** என்ற அளவில் குத்து காயங்கள் இருந்தது. குறுக்கு வெட்டு தோற்றம் வெளிறிய நிலையில் இருந்தது. கல்லீரல் மற்றம் இரண்டு சிறுநீரகங்களும் சாதாரண நிலையிலும் அளவிலும் குறுக்கு வெட்டு தோற்றத்தில் வெளிறிய நிறத்திலும் இருந்தது. சிறுநீர் பை காலியாக இருந்தது.

V இவருடைய கழுத்து பகுதியை கூராய்வு செய்து பார்த்ததில் முகத்தின் வலது புறத்தில் கீழ் பகுதியில் உள்ள வெட்டு காயம் அதன் அடியே உள்ள தாடை எலும்பு, தசை மற்றும் ரத்த நாளங்களுடன் வெட்டப்பட்டு இருந்தது. இந்த இடத்தை மேலும் கூராய்வு செய்ததில் நாவடி எலும்பு தன்மையாக இருந்தது. தைராய்டு மற்றும் கிரைக்காய்**க்**குறுத்து எலும்புகள் தன்மையாக இருந்தன. உள் தோல் ரத்தம் தோய்ந்த நிலையில் இருந்தது. முதுகு தண்டின் தலை பகுதியில் உள்ள இரண்டாவது தண்டுவட எலும்பு வெட்டப்பட்டு சுற்றியுள்ள திசுக்கள் கன்றிய நிலையிலும் அதன் அடியே உள்ள முதுகு தண்டு கன்றிய

நிலையிலும் காணப்பட்டன.

VI இடுப்பு எலும்பு தன்மையாக இருந்தது.

உடல் கூராய்வு 28/06/2018 மதியம் 1.20 மணிக்கு முடிவுற்றது. காணப்பட்ட காயங்கள் அனைத்தும் இறப்பிற்கு முன்பு ஏற்பட்டவை ஆகும். சேகரம் செய்யப்பட்ட உடல் உள்ளுறுப்புகள் பகுப்பாய்விற்கு தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. மாதிரி ரத்தம் மற்றும் ரத்தம் தோய்ந்த வலை துணி குருதி ஆய்விற்கு அனுப்பி வைக்ப்பபட்டது. காயங்களின் கால அளவு- 12 முதல் 24 மணி நேரம்.

இறப்பின் நேரம்- உடல் கூராய்விற்கு சுமார் 12 முதல் 24 மணி நேரத்திற்கு முன்பு இறந்திருக்க கூடும். இது குறித்து நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.14 ஆகும்.**

**இறுதி கருத்துரை**

**I VPM/TOX.H/915/2018 விழுப்புரம் தடய அறிவியல் ஆய்வறிக்கை 13/07/2018 ந் தேதியிடப்பட்ட அறிக்கை 24/08/2018 அலுவலகத்தில் பெறப்பட்டது. இந்த அறிக்கையின் படி அனுப்பப்பட்ட உடல் உறுப்புகளில் சாராயமும் நச்சு பொருளும் கண்டறியப்படவில்லை. அந்த தடய அறிவியல் ஆய்வறிக்கை அ.சா.ஆ.15 ஆகும்.**

**II. நாவடி எலும்பு தன்மையாக இருந்தது.**

**III. VPM/BIOL/229/2018 – 06/07/2018 ந் தேதியிட்ட அறிக்கை 26/07/2018 ந் தேதியில் அலுவலகத்தில் பெறப்பட்டது. அந்த அறிக்கையில் மாதிரி ரத்தம் மற்றும் ரத்தம் தோய்ந்த வலை துணி குருதி ஆய்விற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றுகுறிப்பிடபட்டுள்ளது. அது அ.சா.ஆ.16 ஆகும்.**

**மேற்கண்ட அறிக்கைகளை பெற்று என்னுடைய இறுதி கருத்தாக இறந்த நபர்**

கூர்மையான ஆயுதத்தால் அவருடைய தலை மற்றும் முகத்தில் ஏற்பட்ட வெட்டு காயங்களின் விளைவாகவும், நெஞ்சு மற்றும் வயிற்று பகுதியில் ஏற்பட்ட குத்து காயங்களின் விளைவாகவும் இறந்திருக்க கூடும் என்று கருத்துரை வழங்கினேன். அந்த இறுதி கருத்துரை அ.சா.ஆ. 17 ஆகும். மேலே சொல்லப்பட்ட வெட்டு , குத்து காயங்கள் என்னிடம் காட்டப்படும் கத்திகளால் ஏற்பட வாய்ப்பு உண்டா என்றால் உண்டு. இது சம்மந்தமாக என்னை போலீசார் விசாரணை செய்தார்கள்.

**2,3,5 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**இல்லை என தெரிவிக்கப்பட்டது.**

**1,4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**இல்லை.**

**மறு விசாரணை இல்லை.**